**மாகாணக் கல்வித் திணைக்களம்**

**வடக்கு மாகாணம்.**

**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018**

| | | |
|---|---|---|
| தரம் : 11 | சைவநெறி I, II | நேரம் :3.00 மணித்தியாலம் |
| சுட்டெண் : ............................................................. | 22 T I,II | |

## பகுதி – I

**கவனிக்க:**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தின் உள்ளே புள்ளடியை (X) இடுக.

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. கடவுள் ஒருவரே என்பதைக் கூறும் இருக்கு வேத வாக்கியம்
    1) சத்யம்வத  2) தர்மம்சர
    3) ஏகம்ஸத்விப்ராபகுதாவதந்தி  4) ஆச்சாரிய தேவோ பவ

02. அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம் என்ற பாடல் பாடப்படும் சந்தர்ப்பம்
    1) தொழிலுக்குச் செல்லும் போது  2) இறைவனை வழிபடும் போது
    3) உணவு உண்ணும் முன்  4) சுப கருமங்களின் போது

03. ஒப்புரவால் உயர்ந்தவர்கள்
    1) ஔவையார், திருவள்ளுவர்  2) குமணன், சிபிச்சக்கரவர்த்தி
    3) குமணன், திருவள்ளுவர்  4) சிபிச்சக்கரவர்த்தி, ஔவையார்

04. சந்திரன் நட்சத்திரங்கள் ஒவ்வொன்றையும் கடந்து செல்ல எடுக்கின்ற காலப்பகுதி
    1) வாரம்  2) திதி  3) யோகம்  4) கரணம்

05. ஆவணி மாத பூரணைக்கு முந்திய வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படும் விரதம்
    1) வரலக்சுமி விரதம்  2) சதுர்த்தி விரதம்  3)விளக்கீடு  4)நவராத்திரி

06. இறைவனின் தூக்கிய திருவடி குறிக்கும் தொழில்
    1) படைத்தல்  2) காத்தல்  3) அழித்தல்  4) அருளல்

07. திருமாலுக்கும் இலக்குமிக்கும் மருமகனாக விளங்கியவர்
    1) முருகன்  2) பிரம்மா  3) வீரபத்திரர்  4) சயந்தன்

08. “ஏழைக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லமுடியவில்லை என்றால் பள்ளி அவர்களிடம் செல்லவேண்டும்” என்று விரும்பியவர்
    1) சேர் பொன். இராமநாதன்  2) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்
    3) சுவாமி ஞானப்பிரகாசர்  4) சுவாமி விவேகானந்தர்

agaram.lk

09. திராவிட வேதம் என அழைக்கப்படுவது

1) திருமுறைகள் 2) நாலாயிர திவ்யப் பிரபந்தம்

3) திருப்புகழ் 4) பெரிய புராணம்

10. காலனைக் காலால் உதைத்த கங்காதரக் கடவுள் கோயில் கொண்டிருக்கும் திருத்தலம்

1) சுவாமிமலை 2) திருக்கடவூர் 3) மதுரை மீனாட்சி அம்மன் 4) ஸ்ரீரங்கம்

11. சொற்கோ என அழைக்கப்படுபவர்

1) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் 2) சுந்தரமூர்த்தி சுவாமிகள்

3) திருநாவுக்கரசு சுவாமிகள் 4) மணிவாசகர்

12. "பூத்தேன் தாயெனக் கொண்டுநின் பொன்னடி..." என்ற பதிகம் பாடிய சந்தர்ப்பம்

1) செங்கட்டிகளைப் பொன்கட்டிகளாக்கியமை

2) படிக்காசு பெற்றமை

3) ஆண்பனைகளை பெண்பனைகளாக்கியமை

4) பாலை நிலத்தை நெய்தல் நிலமாக மாற்றியமை

13. ஆலயங்களில் நிகழும் கொடியேற்ற உற்சவத்தின் போது பாடப்படுவது

1) திருமுறைகள் 2) கொடிக்கவி 3) திருவாசகம் 4) பத்ததி

14. திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தைத் தோற்றுவித்தவர்

1) உமாபதி சிவாச்சாரியார் 2) ஆறுமுக நாவலர்

3) நமசிவாய தேசிகர் 4) மெய்கண்டார்

15. அருணகிரிநாதர் முத்தியடைந்த தினம்

1) ஆவணி மூலம் 2) ஆடிச்சோதி 3) ஆனி மகம் 4) ஆனிமூலம்

16. சிகராதி பஞ்சாட்சரமாவது

1) நமசிவாய 2) சரவணபவ 3) சிவாயநம 4) நாராயணாய நமக

17. உபாகமங்களில் ஒன்று

1) காரணம் 2) காமிகம் 3) வாதுளம் 4) சிவதருமோந்திரம்

18. கண்ணகி வழிபாட்டை இலங்கைக்கு கொண்டுவந்த மன்னன்

1) கஜபாகு மன்னன் 2) மகா பராக்கிரமபாகு

3) அசோக மன்னன் 4) துட்டகைமுனு

19. மகா துவட்டாபுரம் என அழைக்கப்படும் ஈழத்துச் சிவத்தலம்

1) திருக்கேதீச்சரம் 2) திருக்கோணேச்சரம் 3)முன்னேச்சரம் 4)நகுலேச்சரம்

20. ஈழத்திலே மிக உயரமான கொடிமரம் அமைந்துள்ள ஆலயம்

1) ஒட்டிசுட்டான் தான்தோன்றியீஸ்வரர்

2) பொன்னம்பலவாணேஸ்வரம்

3) காரைநகர் சிவாலயம்

4) கொக்கட்டிச்சோலை தான்தேன்றியீஸ்வரம்

21. சைவ பரிபாலன சபை ஸ்தாபிக்கப்பட்ட ஆண்டு

1) 1945 2) 1882 3) 1888 4) 1832

agaram.lk

22. பௌராணிகர் என அழைக்கப்படுவோர்

1) திருமுறைகள் ஓதுவோர் 2) புராணபடனம் செய்வோர்
3) இறைவனை வழிபடுவோர் 4) தியானத்தில் ஈடுபடுவோர்

23. பிதிர்க்கடன்களை நிறைவேற்ற வடக்கிலங்கையிலும் கிழக்கிலங்கையிலும் சிறப்பாக அமைந்த தீர்த்தங்கள்

1) மாவிட்டபுரம், நல்லூர் 2) கொழும்பு முகத்துவாரம், கீரிமலை
3) கீரிமலை, மாமாங்கம் 4) மாமாங்கம், திருவடிநிலை

24. “யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி” எனக் கூறும் நூல்

1) தேவாரம் 2) திருவாசகம் 3) திருவிசைப்பா 4) திருமந்திரம்

25. பஞ்சாங்கம் எழுந்த காலப்பகுதி

1) குப்தர் காலம் 2) பல்லவர் காலம் 3) சங்ககாலம் 4) சோழர் காலம்

26. ஆயுட்காரன், பாவத்தின் கிரகம் என அழைக்கப்படுபவர்

1) சூரியன் 2) சந்திரன் 3) சனிபகவான் 4) ராகு

27. தீபாவளிப் பண்டிகையுடன் தொடர்புடைய அசுரன்

1) கஜமுகாசுரன் 2) அனலாசுரன் 3) மகிடாசுன் 4) நரகாசுரன்

28. திருமணத்தின் போது மணமேடை அமையும் திசை

1) கிழக்கு 2) மேற்கு 3) வடக்கு 4) தெற்கு

29. இருக்கு வேதத்தில் அடங்கும் பாசுரங்கள்

1) 108 2) 1008 3) 1028 4) 138

30. மந்திரம், மாயம், மருந்து ஆகியவற்றிற்கு முதன்மையளிக்கும் வேதம்

1) இருக்கு 2) யசுர் 3) சாமம் 4) அதர்வணம்

agaram.lk

31. தேர் வடிவமைக்கும் முறையைக் கூறும் நூல்

1) பத்ததிகள் 2) மானசாரம் 3) திருவருட்பயன் 4) வேதங்கள்

32. குருவழிபாட்டால் வீடுபேறுபெற்றோர்

1) திருமூலர், குலச்சிறையார், அப்பூதியடிகள்
2) சேரமான் பெருமாள், பூசலார், சாக்கிய நாயனார்
3) இயற்பகையார், திருநீலகண்டார், சிறுத்தொண்டர்
4) இளையான் குடிமாற நாயனார், பூசலார், திருமூலர்

33. பிறக்க முத்திதரும் ஆலயம்

1) சிதம்பரம் 2) காசி 3) திருவாரூர் 4)திருவண்ணாமலை

34. பிரபோத சைதன்யர் என்ற துறவு நாமத்தைக் கொண்ட ஈழத்துத் தமிழ்ப் பெரியாவர்

1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 2) சோமசுந்தரப் புலவர்
3) சுவாமி ஞானப்பிரகாசர் 4) சுவாமி விபுலானந்தர்

35. இராமன் இராவணனை அழித்ததால் ஏற்பட்ட பிரமஹத்தி தோசம் முழுமையாக நீங்கிய தலம்

1) திருக்கேதீச்சரம் 2) திருக்கோணேச்சரம்
2) 3) முன்னேச்சரம் 4) நகுலேச்சரம்

கீழ்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி 36, 37, 38 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| **புறச்சந்தான குரவர்** | **நூல்கள்** | **பாடலும் பகுப்பும்** |
|---|---|---|
| A. அருணந்தி சிவாச்சாரியார் | D. சிவஞானபோதம் | G. பரபக்கம், சுபக்கம் |
| B. உமாபதி சிவாச்சாரியார் | E. சிவஞானசித்தியார் | H. 13 வெண்பாக்கள் |
| C. மெய்கண்டார் | F. வினாவெண்பா | I. 12 சூத்தங்கள் |

36. சகலாகம பண்டிதர் என்ற புறச்சந்தான குரவருடன் தொடர்புபட்ட தொகுதி

1) ADF 2) AEG 3) AEH 4) CFI

37. மெய்கண்ட சாஸ்திரங்களில் முதன்மையானவருடன் தொடர்புடைய பகுதி

1) AEG 2) CDE 3) CFH 4) CDI

38. சித்தாந்த அட்டக ஆசிரியருடன் தொடர்புடைய தொகுதி

1) BFH 2) BCH 3) BDH 4) BFG

39. சூரபன்மனால் சிறை வைக்கப்பட்ட தேவர்களை மீட்கச் சென்றவர்

1) வீரவாகுதேவர் 2) கபிலதேவர் 3) சயந்தன் 4) இந்திரன்

40. மனிதனானவன் தெய்வமாகப் பெரிதும் வேண்டியது.

1) கல்வியும் செல்வமும்
2) ஈகையும் இரக்கமும்
3) நேர்மையும் கடமையுணர்வும்
4) புகழும் பெருமையும்

(40X1=40 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி - II

முதலாம் வினாவும் இரண்டாம் வினாவும் **உட்பட ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

1) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை தருக.

1. ஈழத்தில் வெளிவரும் பஞ்சாங்கங்கள் எவை?
2. அந்தக்கரணங்கள் எவை?
3. மூவகை ஆன்மாக்களும் எவை?
4. விபூதியின் மறுபெயர்கள் இரண்டைக் குறிப்பிடுக?
5. பெற்றோரைப் பேணாதவர்களுக்கும், வருத்துவோருக்கும் நரகலோகத்தில் கிடைக்கும் தண்டனை யாது?
6. வறியவர்க்கு அன்னமிடுவதால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு எழுதுக
7. அபிடேகக் கந்தன், அன்னதானக் கந்தன் எனச் சிறப்பிக்கப்படும் முருகன் எழுந்தருளியுள்ள இடங்கள் எவை?
8. பிடித்த பத்து என்றால் என்ன?
9. சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம் என்பவற்றின் ஆசிரியர் யார்?
10. அட்டபந்தனத்துள் அடங்கும் இருபொருட்களைக் குறிப்பிடுக?

(10X2=20 புள்ளிகள்)

2) பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக. அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

1. “அங்கமும் வேதமும்…”
2. “தந்ததுன் தன்னை…”
3. “கற்றவர் விழுங்கும்…”
4. “தண்ணளி வெண்குடைவேந்தன்…”
5. “உம்பர்தருத்தேனுமணிக்…”

((5+3)X2=16 புள்ளிகள்)

agaram.lk

3) “தூய்மையான இடங்களில் மட்டுமே இறைவன் உறைவான்”

01. இறைவனை வழிபடுவதற்குரிய இடங்கள் எவை?

02. சைவ இல்லம் ஒன்றை அடையாளப்படுத்தும் விடயங்கள் மூன்று தருக?

03. பூர்வக்கிரியைகள் என்றால் என்ன? உதாரணம் மூன்று தருக?

(2+3+3=8 புள்ளிகள்)

4) “ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணி அலதொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ”

01. பெரியபுராணத்தின் ஆசிரியர் யார்? இப்புராணம் இடம்பெறும் திருமுறை எது?

02. இப்பாடலில் சிவனடியார்களின் தோற்றம் எவ்வாறு கூறப்படுகின்றது?

03. திருக்கூட்டச் சிறப்புப் பற்றி விளக்குக?

(2+3+3=8 புள்ளிகள்)

5) மும்மலம் "நெல்லினுக்கு முளையொடு தவிடு உமியும் போல்"

01. மும்மலங்களும் எவை?

02. பிராரத்துவ வினை எத்தனை வகைப்படும்? அவை எவை?

03. மாயை என்பதன் பொருளை எழுதி, அதிலிருந்து தோற்றம் பெறும் தத்துவங்களையும் எழுதுக.

(2+3+3=8 புள்ளிகள்)

6) "ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி"

01. திருவாதவூரர் எனப் போற்றப்படுபவர் யார்? இவரது பாடல்கள் அடங்கும் திருமுறை யாது?

02. இவர் புரிந்த அற்புதங்கள் மூன்றினை எழுதுக?

03. இவர் புரிந்த சமூகப்பணிகள் யாவை?

(2+3+3=8 புள்ளிகள்)

7) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறு குறிப்பு எழுதுக.

1. சைவ நாற்பாதங்கள்
2. பஞ்சாங்கம்
3. கந்த சஷ்டி விரதம்
4. தீபாவளிப் பண்டிகை

(2X4=8 புள்ளிகள்)

agaram.lk